A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.tn.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 12 / 2025**

திரு T. குருசாமி,
21A, வாத்தியார்விளை,
நாகர்கோவில் – 629 001,
கன்னியாகுமரி மாவட்டம்.

………மேல்முறையீட்டாளர்
(திரு T. குருசாமி)

எதிர்

1. உதவி மின்பொறியாளர்/ கிருஷ்ணன் கோவில்,
கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
TNEB வளாகம், டிஸ்டிலரி ரோடு,
வடக்சேரி, நாகர்கோவில் – 629 001.

2. உதவி செயற்பொறியாளர்/ வடக்கு / நாகர்கோவில்,
கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
துணை மின் வளாகம், பார்வதிபுரம், நாகர்கோவில் – 629 003.

3. செயற்பொறியாளர்/ விநியோகம் / நாகர்கோவில்,
கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
பார்வதிபுரம், நாகர்கோவில் – 629 003.

. .. . எதிர்மனுதாரர்கள்
(திருமதி I.A. கவிதா, உதவி மின்பொறியாளர்/ கிருஷ்ணன் கோவில்
திருமதி M. ரமணிபாய், உதவி செயற்பொறியாளர்/ வடக்கு / நாகர்கோவில்
திரு N.K. ஜவஹர் முத்து, செயற்பொறியாளர்/ விநியோகம் / நாகர்கோவில்)

**மனு பெறப்பட்ட நாள்: 07-02-2025**

**கேட்புரை நாள்: 20-03-2025**

**ஆணை நாள்: 28-03-2025**

07.02.2025 அன்று பெறப்பட்ட திரு T. குருசாமி, 21A, வாத்தியார்விளை, நாகர்கோவில் – 629 001, கன்னியாகுமரி மாவட்டம் அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 12/2025 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 20.03.2025 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

## 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பு எண் 112–162–466–க்கு வீதப்பட்டி V–லிருந்து IIIA(1)–ற்கு மாற்றி தருமாறு விண்ணப்பித்துள்ளார்.

## 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பு எண் 112–162–466–க்கு வீதப்பட்டி V–லிருந்து IIIA(1)–ற்கு மாற்றி தருமாறு விண்ணப்பித்துள்ளார்.

2.2 வீதப்பட்டி V–லிருந்து விவசாய பயன்பாட்டிற்காக வீதப்பட்டி IIIA1–ற்கு மாற்ற இயலாது எனவும் வீதப்பட்டி IIIA1–இல் மின் இணைப்பு வாரிய விதிப்படி 50 செண்ட் நிலத்திற்கு குறையாமல் இலவச மின் இணைப்பிற்கு பதிவு செய்த பின்னர் வீதப்பட்டி IIIA1–ற்கு விண்ணப்பிக்க இயலும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எதிர்மனுதாரரின் பதிலில் திருப்தி இல்லாததால் மேல்முறையீட்டாளர் கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 15.10.2024 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம் 20.12.2024 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில்

அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

## 3.0 <u>மன்றத்தின் தீர்வு :</u>

3.1 கன்னியகுமாரி மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 20.12.2024 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"மன்றத்தின் தீர்வு:*
> *மனுவில் குறிப்பிட்டுள்ள மின்னிணைப்பு எண்.112-162-466-ற்கு வீதப்பட்டி IIIA1ற்கு மாற்றம் செய்ய வேண்டுமாயின் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் Tariff order T.O. No.6 of 2024, dt.15.07.2024 3.2.11.8-ன்படி இலவச விவசாய மின்னிணைப்பிற்கு விண்ணப்பித்து சாதாரண முறையில் காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்களுக்கு மட்டுமே வீதப்பட்டி IIIA1-ற்கு விண்ணப்பிக்க இயலும், என்பதால் இம்மனு முடித்து வைத்து ஆணையிடப்படுகிறது."*

## 4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 20.03.2025 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு T. குருசாமி அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திருமதி I.A. கவிதா, உதவி மின்பொறியாளர்/ கிருஷ்ணன் கோவில், திருமதி M. ரமணிபாய், உதவி செயற்பொறியாளர்/ வடக்கு / நாகர்கோவில் மற்றும் திரு N.K. ஜவஹர் முத்து, செயற்பொறியாளர்/ விநியோகம் / நாகர்கோவில், கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகளில்

இம்முறையீட்டு மனுவிற்கு சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேல்முறையீட்டாளர் மேற்கண்ட மின் இணைப்பு எண்: 112-162-466-ற்கு அனுமதிக்கப்பட்ட மின் பளு 2 KW வீதப்பட்டி V-ல் 23-11-2024 அன்று விவசாய பயன்பாட்டிற்க்காக வழங்கப்பட்டுள்ளது என்று இளநிலை பொறியாளர்/விநியோகம்/ கிருஷ்ணன் கோவில் அவர்கள் தவறுதலாக கூறியதாகவும், பல ஆண்டுகளுக்கு முன்னரே வீடு கட்டும் நோக்கோடு வழங்கப்பட்ட மின் இணைப்பு, இதன் அருகில் வாத்தியார்விளை அம்மன் கோவில் ஊர் வகை இடுகாடு மாற்றப்போவதாக நிர்வாகம் கூறியதின் அடிப்படையில், ஆனால் தற்போது வரை மாற்றப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

5.2 எனவே தற்போது தோட்டக்கலை சார்ந்த பழங்கள், காய்கறிகள், கீரை வகைகள் தற்போது வளர்க்கப்பட்டு, மின் இணைப்பு பயன்பாட்டில் உள்ளதாகவும், தற்போது மின் பயன்பாட்டில் உள்ள தோட்டக்கலை துறை பயிர் சம்பந்தமான வீதப்பட்டிக்கு மாற்றம் செய்ய விண்ணப்பம் செய்தால் அது குறித்து எந்த தகவலும் சொல்லாமல், இலவச மின் இணைப்புபெற அறிவுறுத்துவதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 வாரிய விதிகளின்படியும், மின்துறை பொதுத் தகவல் அதிகாரிகளின் தகவல்கள் மூலமாகவும், தற்போது தோட்டக்கலை பயிர்களின் பயன்பாட்டில் இருக்கும் மின் இணைப்பு எண்.07-112-162-466 ற்க்கு வீதப்பட்டி Vல் இருந்து III A-1க்கு மாற்ற Horticulture Department ன் சான்று, ஆதார் கார்டு மூலம் 19-9-2024 அன்று online மூலம் விண்ணப்பம் செய்து அதற்கான கட்டணம் ரூ.254 Service Charge, Rs.196ம் செலுத்தி அதன் நகலை திருமதி கவிதா- உதவி மின் பொறியாளர், கிருஷ்ணன் கோவில், நாகர்

கோவில் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 சுமார் 14 நாட்களுக்கு பின்னர் 03-10-2024 அன்று மாலை கள ஆய்வு செய்து மின் மீட்டரில் கணக்கு எடுக்கப்பட்டதாகவும், ஆனால் எந்த அளவீடும் செய்யப்படவில்லை எனவும், இது சம்பந்தமாக AE அலுவலகத்தை தொடர்பு கொண்டபோது அங்குள்ள Staff உடனே கிடைக்காது என்றும், மேல் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று கூறியதாகவும், வாரிய விதிகளின்படி வீதப்பட்டி மாற்ற சுமார் 7 தினங்கள் என்ற நிலையில் கால தாமதத்தை தவிர்க்க மின்னகம் நம்பரில் தொடர்பு கொண்டதாகவும், மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தையும் நாடியதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 இதனை தவறாக புரிந்து கொண்ட உதவி பொறியாளர், மேல் அதிகாரிகளின் துணையோடு, முன்னிற்க்கு பின் முரணாக நில அளவு எடுக்காமலே 5 சென்ட் இருப்பதால் விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாகவும், சுமார் 59 நாட்கள் கழித்து online application status ல் cancel செய்யப்பட்டுள்ளதாகவும் (18-11-24) அதிகாரிகள் மற்றும் மன்ற ஆணையம் வீதப்பட்டி எண் III A -1 Horticulture என்ற சொல்லை தவிர்த்து விவசாயத்திற்கு மாற்ற இயலாது என்று கூறுகிறார்கள் என்றும் தோட்டக்கலை பயிர்களுக்கு மாற்ற இயலாது என்று கூறவில்லை என்றும், மறைமுகமாக வேண்டும் என்றே கால தாமதபடுத்தி மன உளைச்சலுக்கும், பொருட் செலவுக்கும் ஆளாக்கப்பட்டுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள மின்னிணைப்பு எண்: 112-162-466 - ற்கு வீதப்பட்டி V-லிருந்து வீதப்பட்டி IIIA1-ற்கு மாற்றுவது சம்பந்தமாக 12.01.2024 அன்று சிவதாணு மண்டபத்தில் நடந்த மக்களுடன் முதல்வர் முகாமில் இளநிலை பொறியாளர், விநியோகம், கிருஷ்ணன் கோவில் ஆறுதலாக பேசி விண்ணபத்தினை திரும்ப தன்னிடமே தந்துவிட்டார்கள் என்றும், அதன் பின்னர் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் தோட்டக்கலை அலுவலர் ஆகியோரிடமிருந்து சான்றிதழ் பெற்று 19.09.2024 அன்று இணையதளத்தில் விண்ணப்பித்து விட்டு நகல்களை இளநிலைபொறியாளர் அலுவலகத்தில் ஒப்படைத்தபோது பொறியாளரை சந்திக்க முடியவில்லை என்றும்

அதனால் கைபேசி வாயிலாக தொடர்பு கொண்ட காரணத்தினால் 03.10.2024 அன்று கள ஆய்வு செய்து மின்னளவியில் மின்னளவு எடுக்கப்பட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 பின்னர் கைபேசி வாயிலாக தொடர்பு கொண்டபோது மேல் அதிகாரிக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், இது சம்பந்தமாக மின்னகம் நம்பரில் தொடர்பு கொண்டு வீதப்பட்டி மாற்றம் ஒரு வாரத்தில் கொடுக்கப்பட வேண்டும் என ஆணைய பதிவுகளில் உள்ளதாகவும், ஒரு மாதமாகியும் இதுவரையிலும் நடவடிக்கை எடுக்கவில்லை, எனவே தன்னுடைய விண்ணபத்திற்கு விரைவில் வீதப்பட்டி மாற்றம் செய்யுமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:**

6.1 மின் இணைப்பு எண். 112–162–466, விகிதப்பட்டி V–ல் 23.11.2012 அன்று வழங்கப்பட்டதாகவும், மின்னிணைப்பிற்கு தற்போதைய கணினி பதிவின் படி மின் நுகர்வோரின் அலைபேசி எண். 9442272721 எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 மின் இணைப்பு எண். 112–162–466 விகிதப்பட்டி V–யில் others category யில் திரு. T குருசாமி, என்பவருக்கு சானல் கரை தெரு, வாத்தியார்விளை சர்வே எண். A7/18–யில் வடசேரி, கிராமத்தில் உள்ள இடத்தில் அனுமதிக்கப்பட்ட மின்பளு 2.0 KW–ல் 23.11.2012–ம் வருடம் வழங்கப்பட்டதாகவும், புகார்தாரர் கூறியதுபோல் இளநிலை பொறியாளர், விநியோகம், கிருஷ்ணன்கோயில் அவர்களால் 23.11.2024 அன்று விவசாய பயன்பாட்டிற்க்காக வழங்கப்பட்டது என கூறவில்லை எனவும், மேற்கண்ட இடத்தினை கள ஆய்வு செய்ததில் அங்கு எந்த வகையான கட்டுமான பணிகளும் தொடங்கப்படவில்லை புகார்தாரரின் இடத்தினை தவிர அதனை சுற்றியுள்ள இடங்களில் முழுவதும் வீடு கட்டப்பட்டு குடியிருந்து வருகின்றதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 புகார்தாரரின் இடத்தில் தோட்டக்கலை (Horticulture) சார்ந்த காய்கறி பயிர்களோ, கீரை வகைகளோ மலர் செடிகளோ, பழம் செடிகளோ பயிரிடப்படவில்லை எனவும், புகார்தாரர் இடத்தில் வேப்பமரங்கள், கறிவேப்பிலை மரம், 3 தென்னை மரங்கள்,

முருங்கை மரம், வாழைமரங்கள் மற்றும் இதர மரங்கள் உள்ளது எனவும், புகார்தாரர் மின் இணைப்பு எண். 112–162–466 யை விகிதப்பட்டி V யிலிருந்து விவசாயம் மற்றும் அது சார்ந்த பயன்பாட்டிற்காக விகிதப்பட்டி IIIA1 க்கு மாற்றம் செய்ய வேண்டி 19.9.2024 அன்று இணையதளம் வழியாக விண்ணப்ப எண்.1120724805–ன் படி பதிவு செய்திருந்ததாகவும், விவசாய பயன்பாட்டிற்காக IIIA1 மாற்றம் செய்ய கேட்ட விண்ணப்பத்தின் அடிப்படையில் உதவி பொறியாளர் / விநியோகம்/ கிருஷ்ணன்கோவில் அவர்கள் கள ஆய்வு செய்ததில் அங்கு தோட்டக்கலை பயிர்கள் எதுவும் பயிரிடப்படவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் மாற்றியமைக்கப்பட்ட வீதப்பட்டி உத்தரவு எண்.6/2024 நாள். 15.07.2024 ன் படி விவசாய பயன்பாட்டிற்கு விகிதப்பட்டி IIIA1ல் மாற்றம் செய்ய வேண்டுமானால் விகிதப்பட்டி IV–யில் குறிப்பிட்டுள்ள விவசாய மற்றும் தொடர்புடைய செயல்பாடுகளுக்காக நீர் இறைத்தல் தேவைக்கு விகிதப்பட்டி IV ல் சாதாரண பயன்பாட்டிற்கு பதிவு செய்து மின் இணைப்பு கிடைக்காத நுகர்வோர்க்கு மட்டும் விகிதப்பட்டி IIIA1 ல் தற்சமயத்திற்கு மின் இணைப்பு வழங்க உத்தரவு உள்ளதாகவும், எனவே புகார்தாரர்க்கு வீதப்பட்டி மாற்றம் செய்ய இயலாததால் விண்ணப்பம் ரத்து செய்யப்படுகிறதாகவும், உதவி செயற்பொறியாளர் விநியோகம் பார்வதிபுரம் அவர்களால் தகவல் தெரிவிக்கப்பட்டதாகவும், மேலும் no consumer shall be permitted to change the tariff of the service connection from any low tension tariff (other than agriculture) to low tension for agriculture. எனவே தவறான விகிதப்பட்டி மாற்றம் கேட்டதாக கூறி விண்னணப்பம் கணினியில் ரத்து செய்யப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 புகார்தாரரின் விண்ணப்ப எண். 11211121370/12–13 தேதி 20.11.12 ன்படி 5 சென்ட் நிலம் உள்ளதாக தெரிவித்துள்ளதாகவும், அதன் படி உதவி செயற்பொறியாளர் விநியோகம் பார்வதிபுரம் அவர்கள் 5 சென்ட் என்று சரியான தகவலே வழங்கியுள்ளதாகவும், மேலும் வாரிய விதிமுறைகளின் படி விவசாய பயன்பாட்டிற்கு விகிதப்பட்டி IV யில் Normal category–யில் பதிவு செய்ய வேண்டும் எனில் TNERC விதிகளின் படி குறைந்த பட்சம் 50 சென்ட் விவசாய நிலம் விண்ணப்பதாரர் பெயரில் இருக்குமானில் விகிதப்பட்டி IV–யில் normal category–யில் பதிவு செய்து அதன் பின்

விகிதப்பட்டி IIIA1–யில் மின் இணைப்பு பெற முடியும் என்பதால் வாரிய விதிகளின் படி IIIA1–க்கு மாற்றம் செய்ய இயலாது என கூறி விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டதாகவும், மேலும் நுகர்வோர்க்கு விகிதப்பட்டி IV–யில் பதிவு செய்ய இடத்தின் அளவு பற்றி கூறப்பட்டதாகவும், மேலும் செயற்பொறியாளர்/விநியோகம்/நாகர்கோவில் அவர்களால் மின் இணைப்பு எண். 112–162–466 23.11.2012 அன்று வழங்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு பதில் வழங்கப்பட்டதாகவும், மேலும் கேட்புரை நாளில் (15.11.2024) மன்றத்தின் முன் 50 சென்ட்டுக்கு குறைவாக தான் நிலம் உள்ளது என தெரிவிக்கப்பட்டதாகவும், நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற ஆணையில் இலவச விவசாய மின்னிணைப்பிற்கு விண்ணப்பித்து சாதாரணமுறையில் காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்களுக்கு மட்டுமே விகிதப்பட்டி IIIA1–க்கு விண்ணப்பிக்க இயலும் என்பதால் இம்மனு முடித்து வைத்து ஆணையிடப்பட்டதாகவும், புகார்தாரருக்கு விகிதப்பட்டி IV–யில் விவசாய பயன்பாட்டிற்கு பதிவு செய்ய வாரிய விதிமுறைகளை பற்றி கூறப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 திரு. T. குருசாமி, என்பவருக்கு சானல் கரை தெரு, வாத்தியார்விளை சர்வே எண். A7/18–யில் வடசேரி, கிராமத்தில் உள்ள இடத்தில் கட்டுமான பணிக்காக மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்ததன் அடிப்படையில் அன்றைய விகிதப்பட்டி படி கட்டுமான பணிக்கான விகிதப்பட்டி V–ல் மின் இணைப்பு எண். 112–162–466 23.11.2012 அன்று வழங்கப்பட்டதாகவும், தற்போது அன்னார் மேற்கண்ட மின் இணைப்பை விகிதப்பட்டி IIIA–1ல் மாற்றம் செய்ய வேண்டி 19.09.2024 அன்று விண்ணப்பித்ததன் அடிப்படையில் களஆய்வு செய்ததில் அந்த இடத்தில் தோட்டக்கலை (Horticulture) சார்ந்த காய்கறி பயிர்களோ, கீறை வகைகளோ மலர் செடிகளோ, பழச் செடிகளோ பயிரிடப்படவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 மேலும் Town survey land register அளித்த சர்வே எண். A7/18P, 19P மனையாகவே குறிப்பிட்டுள்ளதாகவும், மேலும் அந்த இடத்தை சுற்றிலும் மக்கள் வசிக்கும் குடியிருப்பு பகுதிகளாக உள்ளதாகவும், மேலும் Town survey land register வழங்கிய ஆவணங்களின் படி மனை என குறிப்பிட்டிருப்பதால் அந்த இடத்திற்கு IIIA–1ல் மின் இணைப்பு வழங்க

வழிவகை இல்லை எனவும், அன்னார் மின் கட்டண தொகை குறைத்து செலுத்த வேண்டி மட்டுமே IIIA1–ல் விவசாய பயன்பாடு இல்லாத இடத்திற்கு விண்ணப்பித்திருப்பது தெரியவருகிறது என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் தனது மின் இணைப்பு எண் 112–162–466 பல ஆண்டுகளுக்கு முன்பே வீடு கட்டும் நோக்கில் பெறப்பட்டதாகவும், நிர்வாகம் இதனை வேறு இடத்திற்கு மாற்றுவதாக கூறியிருந்த போதிலும், இன்று வரை எந்த மாற்றமும் செய்யப்படவில்லை எனவும், தற்போது, இந்த மின் இணைப்பு தோட்டக்கலை பயிர்கள், பழங்கள், காய்கறிகள் மற்றும் கீரை வகைகளை வளர்க்க பயன்பட்டு வருவதால், வீதப்பட்டி V–ல் இருந்து IIIA–1 ஆக மாற்றுவதற்காக இணையதளம் மூலம் விண்ணப்பித்து, தேவையான கட்டணங்களை செலுத்தியதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 மின் வாரிய விதிகளின்படி வீதப்பட்டி மாற்றத்துக்கு 7 நாட்கள் மட்டுமே ஆகும், ஆனால் 59 நாட்கள் கழித்து விண்ணப்ப நிலை "cancel" செய்யப்பட்டுள்ளதாகவும், அதிகாரிகள் IIIA–1 தோட்டக்கலை பயிர்களுக்கு மாற்ற முடியாது என்று நேரடியாக கூறாமல், விவசாயத்திற்கு மாற்றம் இல்லை என தெரிவித்ததாகவும், இதனால் மறைமுகமாக கால தாமதப்படுத்தி மன உளைச்சல் மற்றும் பொருட்செலவை ஏற்படுத்தியதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.4 கிராம நிர்வாக அலுவலர் மற்றும் தோட்டக்கலை அலுவலரிடமிருந்து சான்று பெற்று இணையதளத்தில் விண்ணப்பித்ததாகவும், ஒரு வாரத்திற்குள் வீதப்பட்டி மாற்றம் செய்ய வேண்டும் என்று கூறப்பட்டிருந்தும், ஒரு மாதத்திற்கும் மேலாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும், எனவே, தன்னுடைய விண்ணப்பத்தை உடனடியாக ஏற்று, வீதப்பட்டி மாற்றத்தை விரைவாக செயல்படுத்த வேண்டும் என மேல்முறையீட்டாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

7.5 எதிர்மனுதாரர் தனது வாதுரையில், மின் இணைப்பு எண் 112–162–466, விகிதப்பட்டி V–இல் 23.11.2012 அன்று வழங்கப்பட்டதாகவும், விவசாய பயன்பாட்டிற்காக வழங்கப்படவில்லை எனவும், அந்த இடத்தினை கள ஆய்வு செய்தபோது எந்த கட்டுமான பணிகளும் தொடங்கப்படவில்லை என்றும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வீடுகள் கட்டப்பட்டு குடியிருப்போர் வசித்து வருவதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.6 மேலும், அந்த இடத்தில் தோட்டக்கலை பயிர்கள் எதுவும் பயிரிடப்படவில்லை என்றும், அங்கு வேப்பமரம், கறிவேப்பிலை மரம், முருங்கை மரம், தென்னைமரம், வாழைமரம் போன்ற மரங்களே உள்ளன என்றும், எனவே, வீதப்பட்டி மாற்றம் கோரப்பட்ட காரணம் தவறானது என்பதால், இணையதளம் மூலம் விண்ணப்பிக்கப்பட்ட விவசாய பயன்பாட்டிற்கான மாற்றம் ஏற்க முடியாது எனவும், உதவி மின்பொறியாளர் கள ஆய்வு செய்ததில் அங்கு தோட்டக்கலை பயிர்கள் இல்லை என்பதால் விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.7 தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் மாற்றியமைக்கப்பட்ட வீதப்பட்டி உத்தரவின் படி, விவசாய பயன்பாட்டிற்கு விகிதப்பட்டி IIIA1–ல் மாற்றம் செய்ய வேண்டுமாயின், முன்பே விகிதப்பட்டி IV–ல் சாதாரண விவசாய பயன்பாட்டிற்கு பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் எனவும், மேலும், விவசாய பயன்பாட்டிற்காக மின் இணைப்பு பெற விரும்புவோர் குறைந்தது 50 சென்ட் நிலம் வைத்திருக்க வேண்டும் என்பதால், மேல்முறையீட்டாளரின் நிலம் 5 சென்ட் மட்டுமே உள்ளதால் அவர் விண்ணப்பித்த வீதப்பட்டி மாற்றம் ஏற்க முடியாது என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.8 மேலும் Town survey land register அளித்த சர்வே எண். A7/18P, 19P மனையாகவே குறிப்பிட்டுள்ளதாகவும், மேலும் அந்த இடத்தை சுற்றிலும் மக்கள் வசிக்கும் குடியிருப்பு பகுதிகளாக உள்ளதாகவும், மேலும் Town survey land register வழங்கிய ஆவணங்களின் படி மனை என குறிப்பிட்டிருப்பதால் அந்த இடத்திற்கு IIIA–1ல் மின் இணைப்பு வழங்க வழிவகை இல்லை எனவும், அன்னார் மின் கட்டண தொகை குறைத்து செலுத்தி வேண்டி மட்டுமே IIIA–ல் விவசாய பயன்பாடு இல்லாத இடத்திற்கு விண்ணப்பித்திருப்பது தெரியவருகிறது என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.9 விவசாய மின் இணைப்பு வீதப்பட்டி V–இல் வழங்கக்கூடாது என தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் வீதப்பட்டி ஆணை Suo–moto Tariff order No. 9 of 2014–ஐ சுட்டிக்காட்டி உரிமதாரரால் அனைத்து அலுவலர்களுக்கும் சுற்றறிக்கை வழங்கப்பட்டது தெரிய வருகிறது. அது கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

பி.ப.பா

**TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LTD.**
**Technical Branch**

O/o. Chief Engineer/Commercial,
144, Anna Salai, Chennai – 2.

**Memo. No. CE/Comml./SE/Comml./EE3/AEE3/F-Instruction/D-33/2016,**
**dt 01-06-2016**

Sub:- Electricity – Instruction to the field regarding effecting of agricultural service connection – Reg.

Ref:- DGP/Vigilance's U.O. Note No.20967/B4/B41/2015-3, dt 11-01-2016.

********

It has been brought to the notice of undersigned that some of the agricultural service connections are effected under Tariff V in Theni Electricity Distribution Circle and then changed into Tariff III(A)-I (Cottage / Tiny Industries) as routine matter. As such there is no provision in the TNERC Tariff orders to effect agricultural service connection under Tariff V.

In this connection, attention of the Chief Engineer/Distribution Regions and the Superintending Engineer/EDCs is invited to TNERC Suo-Motu Tariff Order No. 9 of 2014, wherein the details of tariff categories under which agriculture supply can be effected is given.

As per the Tariff order, the agricultural service connections are to be effected under Tariff IV only. Tariff III-A(1) is also applicable for pumping of water/supply of water for the purpose of "agriculture and allied activities" as specified in LT Tariff IV provided that the applicant is unable to get supply under LT tariff IV as per the seniority maintained specifically for the purpose of providing supply to Agriculture under LT tariff IV. Such LT Tariff III-A(1) consumer is eligible to apply for LT Tariff IV. However, extreme condition is to be taken care while effecting such services and with proper justification without giving room for complaints regarding revenue loss to TANGEDCO.

As and when such applicant becomes eligible to get regular supply under LT Tariff IV as per the specific seniority maintained for that purpose by the licensee, the supply obtained under LT Tariff III-A(1) for the specific purpose mentioned in this sub clause shall be converted into LT tariff IV. Thereafter, the terms and conditions of LT Tariff IV only will apply.

Therefore, the Chief Engineers/Distribution region are instructed to issue instructions to the officers under their control to follow the suo-moto tariff order No.9 of 2014 issued by TNERC and Board's rules and regulations scrupulously while effecting agricultural service connections

Receipt of the memo shall be acknowledged.

Sd/- dated 01-06-2016
Chief Engineer/Commercial (a/c)
for Director (Distribution)

To

All the Chief Engineers/Distribution Region.

All Superintending Engineers/Electricity Distribution Circles.

Copy submitted to the DGP/Vigilance/TANGEDCO/Chennai - 2

Copy to the Chief Financial Controller/Revenue/TANGEDCO/Chennai - 2

Copy to the Chief Internal Audit Officer/TANGEDCO/Chennai – 2.

Copy to the Superintending Engineer/Enforcement/TANGEDCO/Chennai – 2.

7.10 ஆனால் இந்த மேல்முறையீட்டு மனுவில் மேல்முறையீட்டாளர் வீதப்பட்டி V–லிருந்து வீதப்பட்டி IIIA1–ற்கு மாற்ற கோரும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கையில் அவருக்கு எவ்வாறு வீதப்பட்டி V–இல் மின் இணைப்பு வழங்கப்பட்டது என்பதை ஆராய விரும்புகிறேன். இது சம்பந்தமாக, மேல்முறையீட்டாளர் மின் இணைப்பு எண் 112–162–466, விகிதப்பட்டி V–இல் 23.11.2012 அன்று பெறப்பட்ட காலகட்டத்தில் விதிக்கப்பட்ட தமிழ்நாடு மின்சாரம் ஒழுங்குமுறை ஆணையத்தின் வீதப்பட்டி ஆணை எண். 01/2012 நாள் 30.03.2012–இல் கூறப்பட்ட கருத்தின் சாரம்சத்தை ஆராய விரும்புகிறேன். சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

10.21 Low Tension Tariff V:

| Tariff | Fixed Charges (Rupees per kW per month) | Energy Charges in Paise per kWh |
|---|---|---|
| Low Tension Tariff V | | |
| For consumer with consumption 50 units per month or 100 units bimonthly | 60 | 430 |
| For consumer with consumption above 50 units per month or above 100 units bimonthly | 60 | 700 |

10.21.1 This tariff is applicable to All Commercial establishments, private communication providers, cinema studios, cinema theatres and consumers not categorized under LT IA, IB, IC, IIA, IIB (1), II B (2), IIC, IIIA (I), III A (2), IIIB, and IV.

10.21.2 This tariff is also applicable for LT supply for construction activities of residential house/building till the completion of construction activities.

10.21.3 In respect of multi tenements/multistoried buildings/residential complexes where the number of flats/Tenements utilized for commercial purposes exceeds 25% of the total built up area, the LT services relating to common utilities such as common lighting, water supply, lift shall be charged under this tariff.

10.21.4 In respect of residential complexes used for domestic, the common facilities such as Gym, swimming pool, recreation clubs, indoor stadiums and grounds, indoor and community halls, amphi theatres, shops etc will be charged under this tariff.

7.11 மேற்குறிப்பிட்ட வீதப்பட்டி ஆணையின்படி வீதப்பட்டி V என்பது விவசாய மின் இணைப்பிற்கான வீதப்பட்டியாக அல்லாமல் கட்டுமான பணிக்காகவும் மற்றும் இதர பணைகளுக்கான வீதப்பட்டியாகவே இருந்துள்ளது. ஆகவே, மேல்முறையீட்டாளர் அக்காலகட்டத்தில் அளித்த விண்ணப்பத்தினையும் சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் ஆராய விரும்புகிறேன்.

(1)

உறுதி மொழிப் படிவம் [illegible]

படிவம் 1

# தமிழ்நாடு மின்சார வாரியம்

குறைந்த மின் அழுத்த மின்சாரம் பெற விண்ணப்ப படிவம்
(விவசாயம் மற்றும் குடிசைகள் தவிர)

[illegible]ரின் பெயர் : T. GURUSWAMI

[illegible]வரின் பெயர் : L. THANKIAH NADAR

21A, VATHIYARVILAI
KRISHNANCOIL - (P.O)
NAGERCOIL - 629001.

அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

| | |
|---|---|
| மின்கட்டண வீத எண் | : IV R 16001 |
| பதிவுக் கட்டணம் | PR 112 Ar 13 - 3606, 3658 |
| வரவுச் சீட்டு எண், தேதி | : 465290 dt 20.11.12 |
| பதிவு எண். | நேரடி மின் இணைப்பு / நீட்டல் மின் இணைப்பு |
| பதிவு தேதி | : 112.11.21370/12.13 dt 20.11.12 |

[signature]
JE / D / TIV [illegible]

பெறுநர் :
உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளர்,
தமிழ்நாடு மின்சார வாரியம்,
பிரிவு அலுவலகம்.

ஐயா / அம்மையீர்

கீழே குறிப்பிட்ட எனது இருப்பிடத்திற்கு மின் இணைப்பு வழங்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மின்கட்டணம் கூடுதல் மின் கட்டண மின்சார கட்டணத்தை கட்டண விகிதப்படி செலுத்துவதற்கும், மின்வாரியம் அந்த அந்த நேரங்களில் குறிப்பிடும் திருத்திய வைப்புத்தொகை மற்றும் பிற தொகைகளையும் கட்டண விகிதப்படி செலுத்தவும் நான் சம்மதிக்கிறேன். [signature]

நான் [handwritten] வீட்டு உபயோகம் / பொது விளக்கு மற்றும் குடிநீர் வழங்கல் / அங்கீகரிக்கப்பட்ட கல்விக்கூடம், குடிசை மற்றும் சிறிய தொழிற்சாலைகள் /தொழிற்சாலைகள் தகவல் தொழில் நுட்ப தொழிலகங்கள் / வர்த்தக நிறுவனம் / கீழ் மின் வழங்களைப் பயன்படுத்துவேன். கீழ் விவரிக்கப்பட்ட எனது வீட்டிற்கு மின்சாரம் பெறவும் மற்றும் மின் இணைப்பை இரண்டு ஆண்டுகளுக்கு மேல் பயன்படுத்தவும் சம்மதிக்கிறேன். [signature]

மின் இணைப்பு என் பெயரில் இருக்கும் காலத்தில் வீட்டை விற்பதோ / சொத்தை கொடுப்பதோ / காலி செய்யவோ வேண்டி இருப்பின் வாரியத்திற்கு உரிய நிலுவை தொகையை ஒரு மாதத்திற்கு முன்போ / ஏழு நாட்களுக்கு முன்போ எழுத்து மூலம் தெரிவிக்காமல் காலி செய்யவோ / இடம் மாறிச் சென்றாலோ வாரியத்திற்கு செலுத்த வேண்டிய தொகைக்கும் மேற்படி இடத்தில் நான் காலி செய்த பின்பும் அதற்கு உடமை இல்லாத போதும் மின்சாரம் பயன் செய்தமைக்கும் நானே பொறுப்பேற்கிறேன். [signature]

இடத்தின் விவரம் : [handwritten] A7/14.17 [handwritten]

கதவிலக்க எண் : -

தெருவின் பெயர் : [handwritten]

நகரம் / கிராமம் / ஊராட்சி : நாகர்கோவில் / [handwritten] / [handwritten]

உரிமையாளர் பெயர்
(பெரிய எழுத்தில்) : T. [handwritten]

குடைகை இருப்பவர் பெயர் : -

7.12 மேல்முறையீட்டாளருக்கு அக்காலகட்டத்தில் கட்டுமான பணிக்காக வீதப்பட்டி V–இல் மின் இணைப்பு எண் 112–162–466 வழங்கப்பட்டது சரியென உறுதி செய்யப்படுகிறது. மேல்முறையீட்டாளரின் விண்ணப்ப படிவத்திலிருந்து அவர் வீட்டு கட்டுமான பணிக்காகத்தான் அந்த மின் இணைப்பை வேண்டி பெற்றுள்ளார் என்பதும் உறுதியாகிறது. பல ஆண்டுகளுக்கு முன்பே வீடு கட்டும் நோக்கில் கட்டுமான பணிக்காகத்தான் இந்த மின் இணைப்பை பெற்றார் என்பதனை மேல்முறையீட்டாளரும் ஒப்புக் கொண்டுள்ளார்.

7.13 மேலும் வீதப்பட்டி ஆணை எண். 01/2012 நாள் 30.03.2012–யை தொடர்ந்து தமிழ்நாடு மின்சாரம் ஒழுங்குமுறை ஆணையத்தால் வழங்கப்பட்ட வீதப்பட்டி ஆணை எண். SMT Order No.9 of 2014 dated 11.12.2014 –இல் கூறப்பட்ட கருத்தின் சாரம்சத்தை ஆராய விரும்புகிறேன். சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

பி.ப.பா

other facilities shall be charged under this tariff.

### 6.22 Low Tension Tariff VI:

| Tariff | Commission Determined Tariff | |
|---|---|---|
| | Fixed Charges (Rupees per kW per month) | Energy charges in paise/kWh |
| Low Tension Tariff VI | 345 | 1200 |

i. This tariff is applicable for supply of power for temporary activities, construction of buildings and lavish illumination.

ii. The electricity supply for the additional construction beyond 2000 square feet in the premises of an existing consumer shall be provided only through a separate service connection and charged under this tariff.

iii. For temporary supply, the initial/in-principle approval for such construction or to conduct such temporary activity obtained by the applicant from the appropriate authority, wherever necessary, is adequate to effect the supply.

iv. In case of conversion of temporary supply into applicable permanent supply, the same shall be done subject to compliance of codes/regulations/orders.

v. In case of lavish illumination, if the illumination is done frequently or permanently, separate regular service connection shall be provided for lavish illumination and charged under this tariff.

vi. If the supply is availed for short duration for the temporary activity/illumination from an existing metered service connection, the computation of energy/fixed charges for temporary illumination/activity shall be done based on the connected load and duration of temporary supply. Connected load shall be accounted in kW or part thereof. Fixed charges shall be for a month or part thereof. Due credit for such computed energy, limited to the meter consumption of the respective billing period, shall be given in the energy recorded by the meter during the respective billing period for the purpose of regular billing of the existing service connection. The consumer shall abide by the safety norms for wiring.

7.14 கட்டுமான பணிக்காக வழங்கப்படும் மின் இணைப்புகள் வீதப்பட்டி V என்று இருந்த நிலையில் மேற்குறிப்பிட்ட வீதப்பட்டி ஆணை எண். SMT Order No.9 of 2014 dated 11.12.2014–இன்படி வீதப்பட்டி VI என திருத்தி வழங்கப்பட்டிருப்பதும், மேலும்

கட்டுமான பணி முடிவடைந்த பிறகு பொருத்தமான வீதப்பட்டிக்கு மாற்றம் செய்ய வேண்டும் என்பதும் தெரிய வருகிறது.

7.15 மேல்முறையீட்டாளர் கட்டுமான பணிக்காக மின் இணைப்பு எண் 112–162–466, விகிதப்பட்டி V–இல் 23.11.2012 அன்று பெறப்பட்டிருந்தாலும் அந்த இடத்தில் எந்தவொரு கட்டுமான பணியும் மேற்கொள்ளவில்லை என்பதும், 2014 வீதப்பட்டி ஆணையின்படி மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பு தற்சமயம் வரை வீதப்பட்டி v–லிருந்து வீதப்பட்டி VI–க்கு மாற்றியமைத்து வருவாய் இழப்பை சரி செய்ய எதிர்மனுதாரரால் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது பதிவு செய்யப்படுகிறது.

7.16 ஆகவே, மேல்முறையீட்டாளர் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் வீதப்பட்டி IV–இல் விண்ணப்பம் பதிவு செய்து தற்சமயம் வீதப்பட்டி IIIA1–இல் கேட்டதாக அறிய இயலவில்லை. ஆனால் கட்டுமான பணிக்காக வீதப்பட்டி V–இல் மின் இணைப்பு பெற்று 2014 வீதப்பட்டி ஆணையின்படி வீதப்பட்டி V–லிருந்து வீதப்பட்டி VI–ற்கு மாற்றப்படாத நிலையில் மேல்முறையீட்டாளர் இதுவரை வீடு கட்டாமல் அந்த மின் இணைப்பை பயன்படுத்தி வருவதும், மேலும் வீதப்பட்டி V என்பது பணி முடிந்த பிறகு நிரந்தர மின் இணைப்பு வீதப்பட்டி IA –இல் தான் வழங்கமுடியும் என்பதால் தன்னுடைய மின் இணைப்பை தற்சமயம் வீதப்பட்டி IIIA1–ற்கு மாற்றக் கோரும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது.

**8.0 <u>முடிவுரை</u>:**

8.1 மேற்கூறிய பத்திகளில் உள்ள தீர்வின்படி, கட்டுமான பணிக்காக வீதப்பட்டி V–இல் வழங்கப்பட்ட தன்னுடைய மின் இணைப்பை தற்சமயம் வீதப்பட்டி IIIA1–ற்கு மாற்றக் கோரும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 12/2025 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்

1. திரு T. குருசாமி, – By RPAD
21A, வாத்தியார்விளை,
நாகர்கோவில் – 629 001,
கன்னியாகுமரி மாவட்டம்.

2. உதவி மின்பொறியாளர்/ கிருஷ்ணன் கோவில்,
கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
TNEB வளாகம், டிஸ்டிலரி ரோடு,
வடக்சேரி, நாகர்கோவில் – 629 001.

3. உதவி செயற்பொறியாளர்/ வடக்கு / நாகர்கோவில்,
கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
துணை மின் வளாகம், பார்வதிபுரம், நாகர்கோவில் – 629 003.

4. செயற்பொறியாளர்/ விநியோகம் / நாகர்கோவில்,
கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
பார்வதிபுரம், நாகர்கோவில் – 629 003.

5. மேற்பார்வை பொறியாளர், – By Email
**கன்னியாகுமரி** மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
பார்வதிபுரம், நாகர்கோவில் – **629 003.**

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.